செ.வெ.எண்: 27

நாள்: 12.01.2018

ந.க. எண் : அ6/447/2017
நாள் : 01. 2018

மகளிர் திட்டம்
கடலூர் மாவட்டம்

## பத்திரிக்கை செய்தி

கடலூர் மாவட்ட மகளிர் திட்டத்தின் சார்பாக, மகளிர் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் நிலைத்த நீடித்த வாழ்வாதாரத்திற்காகவும், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மகளிர் சுய உதவிக்குழுக்களின்பொருட்களை விற்பனை செய்வதற்காகவும் அவர்களால் தாயாரிக்கப்படும் தரமான பொருட்களை அடையாளபடுத்தும் விதமாகவும் மாவட்ட பொருட்காட்சி கடலூர் மாவட்டம், கடலூர், நெல்லிக்குப்பம் ரோடு BSNL அலுவலகம் எதிரே உள்ள பூமாலை வணிகவளாகத்தில் 24.01.2018 முதல் 04.022018 வரை காலை10.00 மணி முதல் இரவு 8.00 வரை நடைபெற உள்ளது. இந்த மாவட்ட பொருட்காட்சியில் கடலூர் மாவட்ட மகளிர் சுய உதவிக்குழுக்கள் தங்களது தயாரிப்புப் பொருட்களுடன் பல்வேறு மாவட்டங்களை சார்ந்த மகளிர் சுய உதவிகுழுக்கள் கலந்து கொள்ள உள்ளார்கள் இந்த பொருட்காட்சியினை எதிர் வரும் 24.01.2018 அன்று காலை 11.00 மணியளவில் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமைதாங்கி துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்க உள்ளார்கள். இந்த பொருட்காட்சியில் கடலூர் மாவட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி செல்ல தெரிவிக்கப்படுகிறது. மேலும், சுய உதவிக்குழுக்கள் தங்களது பொருட்களை பொருட்காட்சியில் விற்பனை செய்ய கீழ்குறிப்பிட்ட தொடர்பு அலுவலரை அணுகுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### தொடர்பு அலுவலர் முகவரி

திரு.த.சத்தியமூர்த்தி,
கைபேசி எண்: 9444094263
மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
பூமாலை வணிக வளாகம்,
நெல்லிக்குப்பம் மெயின் ரோடு,
கடலூர் - 1. கடலூர் மாவட்டம்.
கை எண்: 04142 - 292143

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
கடலூர்

[signature] 12/1

மாவட்ட ஆட்சித் தலைவர்

12/1/2018